# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 28-01-2025 செவ்வாய் கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

### நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.1 முதல் 10 வரையுள்ள பகுதிகளில் 4500க்கு மேற்பட்ட குடியிருப்பு பகுதியை கொண்ட இடத்தில் மேல்நிலைத்தொட்டி இல்லாத காரணத்தினால் குடிநீர் பற்றாக்குறை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இதனால் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் சீராக வழங்க இயலாத நிலையில் உள்ளது. இதனால் பொதுமக்கள் புகார் தொடர்ந்து அளித்து வருகிறார்கள். எனவே பொதுமக்களுக்கு சீராக குடிநீர் வழங்க ஏதுவாக அரசு விருந்தினர் மாளிகை அமைந்துள்ள பொதுப்பணி துறைக்கு சொந்தமான இடத்தில் புதியதாக 1.00 இலட்சம் மதிப்பு உள்ள மேல்நிலைத்தொட்டி அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கிடவும் இதற்கான செலவுத்தொகையினை பொதுநிதியிலிருந்து செலவு செய்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1150 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.1

குழித்துறை நகராட்சி பொதுசுகாதார பிரிவில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சீருடை வழங்கியதற்கான தையல் கூலிக்கான உத்தேச செலவினமாக ரூ.13680/-யினை நகர்மன்ற தீர்மானத்தில் தீர்மான எண்.1080, நாள் 29-11-2024 மன்றம் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் பணியாளர்களின் எண்ணிக்கை விபரம் கீழ்கண்டவாறு

| | | | |
|---|---|---|---|
| 1) | ஆண் பணியாளர்கள் மொத்தம் | = 27 x 800 | = 21,600 |
| 2) | பெண் பணியாளர்கள் மொத்தம் | = 13 x 80 | = 1,040 |
| | | | 22,640 |
| 3) | ஏற்கனவே நகர்மன்ற தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கப்பட்ட தொகை | | = 13,680 |
| | | | 8,960 |

எனவே மேற்படி பணியாளர்களின் எண்ணிக்கையின்படி கூடுதலாக வரப்பட்டுள்ள தொகை ரூ.8960/- வழங்கிட மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2346/2015/எச்1.

மன்றத்தீர்மான எண்.1151 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.2

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.26821/ஆர்1/2024, நாள் 27-12-2024-ன்படி சொத்துவரி, 01-04-2022-க்குப்பின் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு குறைவாக அளவீடு மேற்கொண்டு சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டிருப்பின் அத்தகைய கட்டடங்களுக்கு மட்டும் புதிதாக அளவீடு செய்து அளவீட்டின்படி உரிய கேட்பு உயர்வு செய்து சொத்துவரி வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

01-04-2022 அன்று உள்ளபடி ஒரு குடியிருப்பு / வணிகப்பயன்பாட்டு கட்டிடத்தின் அளவீடு மாறாதிருக்கும் பட்சத்தில் அதனை சொத்துவரி, குறைவாக விதிக்கப்பட்டதாகக் கருத இயலாது. 01-04-2022 அன்று சொத்து சீராய்வுக்குட்பட்ட கட்டிடத்தின் அளவைவிட புதியதாக கூடுதல் கட்டிடங்கள் கட்டப்பட்டிருந்தால் கூடுதலான அளவீட்டிற்கு மட்டும் வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும். அதனை விடுத்து முழு பரப்பளவிற்கும் புதிய வரிவிதிப்பு விகிதங்களை நிர்ணயம் செய்வது விதிகளுக்கு முரணானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசினால் இலவச மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளில் விசைத்தறிகளை நிறுவி தொழில் நடத்தி வந்தால் அத்தகைய வரி விதிப்புகளை தொழிற்சாலை பயன்பாட்டிற்கு மாற்றம் செய்யாமல் தற்போது உள்ள பயன்பாடு நிலையே தொடரப்பட வேண்டும். இது தொடர்பாக அரசின் தெளிவுரை பெறப்பட்டபின் மாற்றம் செய்வது தொடர்பான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

மன்றத்தீர்மான எண்.1152 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.3

குழித்துறை நகராட்சியில் 2023-2024-ம் ஆண்டு வருவாய் நிதி மற்றும் குடிநீர் வடிகால் நிதி கணக்குகள் தயார் செய்து தணிக்கைக்கு அறிக்கை சமர்ப்பித்த வகையில் திரு. இசக்கி முத்து அவர்களுக்கு ரூ.40000/- வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2034/2024/பி1.

மன்றத்தீர்மான எண்.1153 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சியில் 2023-2024-ம் நிதி ஆண்டிற்கான வருமானவரி (IT) மற்றும் சரக்கு மற்றும் சேவைவரி (GST) ஒப்பந்ததாரர்களின் பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை அந்தந்த நபர்களின் பெயரில் TDS தாக்கல் செய்யப்பட்ட வகையில் திரு. வின்ச்ராஜ் என்பவருக்கு ரூ.23380/- வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.281/2023/பி1.

மன்றத்தீர்மான எண்.1154 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.5</u>

TN.74V.4642 Mahindra and Mahindra Local King Super வாகனத்தினை முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்திட 03-01-2025-ல் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. பின்வருமாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டுள்ளன.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ராஜ் கண்ஸ்ட்ரஷன், செம்பருத்திவிளை, வாவறை. | ரூ.65000/- |
| 2 | திரு. அனிஷ்குமார், அருள் குன்று, சாத்தான்கோடு. | ரூ.61,000/- |

மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ராஜ் கன்ஸ்ட்ரஷன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.877/2013/இ1.

மன்றத்தீர்மான எண்.1155 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.6

குழித்துறை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் (Manual Scavengers) மனித கழிவுகளை மனிதனை அகற்றும் பணியில் மேற்கொள்ளும் பணியாளர்கள் கணக்கெடுப்பு செய்வதில் எவரும் இல்லை என தெரிய வருவதால் பொதுமக்களின் கருத்துக்களை அறிவதற்காக தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு பட்டியல் வரப்பெற்றது. நாளிதழ்களின் பட்டியல் கீழ்க்கண்டவாறு.

1) தினந்தந்தி - ரூ.8946/-
2) தினமலர் - ரூ.5670/-

எனவே மேற்படி வரப்பெற்ற தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் வழங்கிட மன்ற அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2389/2012/எச்1.

மன்றத்தீர்மான எண்.1156 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.7

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் கருங்கல் சாலை 1 முதல் 44 வரையிலான வெளிக்கடைகள் அனைத்தும் 9/2024 முதல் நவீன காய்கறி சந்தை கட்டுமான பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால் 31-08-2024-ல் கடை நடத்தி வந்த உரிமையாளர்கள் காலி செய்துவிட்டு தற்போது வைப்புத்தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார்கள். எனவே மேற்படி கடை உரிமைதாரர்கள் வைப்புத்தொகை கணக்கிலிருந்து கேட்புத் தொகையினை 31-08-2024 வரை ஈடு செய்து விட்டு மீதத்தொகையினை சம்மந்தப்பட்ட உரிமைதாரர்களுக்கு திரும்ப வழங்கிடவும் 09/2024 முதல் 3/2025 வரையுள்ள கேட்பினை கணனியிலிருந்து நீக்கம் செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.2621/2024/அ2

மன்றத்தீர்மான எண்.1157 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.8

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் தினசரி காய்கறி சந்தையில் அமைந்துள்ள IDSMT 1 முதல் 28 வரையிலான கடைகள் அனைத்தும் 10/2024 முதல் நவீன காய்கறி சந்தை கட்டுமான பணி மேற்கொள்ள இடையூறாக இருந்ததால் 30-09-2024-ல் கடை நடத்தி வந்த உரிமையாளர்கள் காலி செய்துவிட்டு தற்போது வைப்புத்தொகை திரும்ப வழங்க கோரியுள்ளார்கள். எனவே மேற்படி கடை உரிமைதாரர்கள் வைப்புத்தொகை கணக்கிலிருந்து கேட்புத் தொகையினை 30-09-2024 வரை ஈடு செய்து விட்டு மீதத்தொகையினை சம்மந்தப்பட்ட உரிமைதாரர்களுக்கு திரும்ப வழங்கிடவும் 10/2024 முதல் 3/2025 வரையுள்ள கேட்பினை கணனியிலிருந்து நீக்கம் செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.2621/2024/அ2.
மன்றத்தீர்மான எண்.1158 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.9

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தை உட்பகுதி கடைகளான A-பிரிவு 1 முதல் 17 வரையுள்ள கடைகள், B-பிரிவு 1 முதல் 14 வரையுள்ள கடைகள், C-பிரிவு 1 முதல் 22 வரையுள்ள கடைகள், D-பிரிவு 1 முதல் 5 வரையுள்ள கடைகள் மற்றும் F-பிரிவு 1 மற்றும் 2 ஆகிய கடைகள் அனைத்தும் 7/2024 முதல் நவீன காய்கறி சந்தை கட்டுமான பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால் 30-06-2024-ல் கடை நடத்தி வந்த உரிமையாளர்கள் காலி செய்துவிட்டு தற்போது வைப்புத்தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார்கள். எனவே மேற்படி உரிமைதாரர்கள் வைப்புத்தொகை கணக்கிலிருந்து கேட்புத் தொகையினை 30-06-2024 வரை ஈடு செய்து விட்டு மீதத்தொகையினை சம்மந்தப்பட்ட உரிமைதாரர்களுக்கு திரும்ப வழங்கிடவும் 7/2024 முதல் 3/2025 வரையுள்ள கேட்பினை கணனியிலிருந்து நீக்கம் செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.2621/2024/அ2

மன்றத்தீர்மான எண்.1159 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.10</u>

குழித்துறை நகராட்சியில் நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வந்த கணினி மற்றும் பயன்படுத்த இயலாத பொருட்களுக்கான (E-Waste) ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 18-12-2024 அன்று கோரியதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. பின்வருமாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டுள்ளன.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு. வில்சன்,<br>த/பெ. ராமையன்,<br>குழந்தன் கரை, மடிச்சல் அஞ்சல் | ரூ.1900/- |
| 2 | திரு.R. தேவராஜ்,<br>த/பெ. ராமலிங்கம்,<br>முளமூட்டுவிளை, குழித்துறை அஞ்சல் | ரூ.2600/- |
| 3 | திரு.T. சத்ருக்கனன்,<br>த/பெ. தங்கப்பன்,<br>வட்டவிளை, மடிச்சல் அஞ்சல் | ரூ.3100/- |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை வழங்கிய திரு.T. சத்ருக்கனன் என்பவரது கூடுதல் ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு ஒப்புதல் வழங்குவது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண்.3194/2023/இ1

மன்றத்தீர்மான எண்.1160 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.11</u>

குழித்துறை நகராட்சி - பொது சுகாதாரப்பிரிவில் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் சுற்றி திரியும் நாய்களின் எண்க்கை 2024-2025 ஆண்டிற்கான கணக்கெடுப்பு சம்பந்தமான கால்நடை மருத்துவமனைக்கு கடித வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கால்நடை மருத்துவமனையில் இருந்து கணக்கெடுப்பில் மொத்தம் 519 நாய்கள் என தெரிய வருகிறது. மேலும் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிட்சை மற்றும் வெறிநாய் காப்பு தடுப்பூசி செலுத்தும் பணியினை ஜீவகாருணியா விலங்குகள் நல அறைக்கட்டளை மூலம் மேற்கொள்ளப்படும். மேலும் இதில் 1 நாய்க்கு 1650 வீதம் 519 நாய்களுக்கு ஏற்படும் உத்தேச செலவின தொகை ரூ.10,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3459/2022/எச்1

மன்றத்தீர்மான எண்.1161 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.12</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் சார்பாக ஐய்யன் திருவள்ளுவர் சிலை 25-வது வெள்ளி விழா கொண்டாட்டம் 30-12-2024, 31-12-2024 ஆகிய தினங்களில் கன்னியாகுமரியில் வைத்து நடைபெற்றுள்ளதால் அதற்கான 25-வது வெள்ளி விழாவிற்கான பேனர்கள் குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பேனர்கள் வைக்கப்பட்டுள்ளது. அதற்கான செலவின தொகை ரூ.7500/-யினை துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு. ராதாரகிருஷ்ணன் என்பவரால் கொடுக்கப்பட்டது. ஆகையால் தொகையினை துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு. ராதாரகிருஷ்ணன் என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3256/2022/எச்1

மன்றத்தீர்மான எண்.1162 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.13</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் MRF (வளமீட்பு) மையத்தில் நெகிழி பிளாஸ்டிக் கழிவுகளை பேலிங் செய்வதற்கான (ரோப் கயிறு, கிளிப்) வாங்கிய செலவு ரூ.24,000/- திரு.J. மரியதாஸ் துப்புரவு பணி மேற்பார்வையாளர் அவர்களால் வாங்கப்பட்டது. எனவே மேற்படி தொகையினை துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு.J. மரியதாஸ் என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3256/2022/எச்1

மன்றத்தீர்மான எண்.1163 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.14</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் மார்த்தாண்டம் கீழ் பம்மத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள (MRF) வளமீட்பு மையத்தில் பிளாஸ்டிக் நெகிழி கழிவுகளை பேலிங் செய்வதற்கு, மக்காத கழிவுகளை தரம் பிரித்து செட்டிநாடு சிமெண்ட் ஆலைக்கு அனுப்புவது தொடர்பாக பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருவதற்கு 6 ஆண் பணியாளர்கள் சுய உதவி குழு மூலம் பணியமர்த்த நகர்மன்ற தீர்மான எண்.1092, நாள் 29-11-2024-ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க ஒருநபருக்கு நாள் ஒன்றிற்கு ரூ.589.37 வீதம் ஓராண்டிற்கு 6 பணியாளர்களுக்கு உத்தேச செலவின தொகை ரூ.14.00 இலட்சம் இத்தொகையினை பொது நிதியிலிருந்து செலவு செய்திட அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2640/2024/எச்1
மன்றத்தீர்மான எண்.1164 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.15

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் கருங்கல் சாலையில் அமைந்துள்ள தற்காலிக காய்கறி சந்தைக்கான, தற்காலிக வாகன நுழைவு கட்டணம் வசூல் செய்வதற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.1097, நாள் 09-12-2024-ன்படி மன்ற அனுமதி 30-01-2025 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் எவரும் கலந்துக்கொள்ளவில்லை. கீழ்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்புத்தொகை ரூபாய் | மாத வாடகை தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | A. ஞானராஜ் | 50,000/- | 63,000/- |
| 2 | M. ஆல்பன் | 50,000/- | 48,000/- |
| 3 | R. ரெஞ்சித் | 50,000/- | 31,000/- |

மேற்படி வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதல் மாத வாடகை தெரிவித்துள்ள திரு.A. ஞானராஜ் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3066-32022/அ2.
மன்றத்தீர்மான எண்.1165 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.16

குழித்துறை நகராட்சியில் பொது சுகாதார பிரிவு கட்டிடம் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த இயலாமல் உள்ளது. மேலும் சமுதாய அமைப்பாளர், நகரமைப்பு பிரிவு, நிலஅளவையர் பிரிவு, வரிவசூல் மையம் ஆகிய அலுவலகங்களுக்கு போதிய வசதி இல்லாத காரணத்தினால் நகர்மன்றத் தலைவரின் அறிவுறுத்தலின்படி இந்நகராட்சி வளாகத்தில் கூடுதலாக அலுவலக கட்டிடம் கட்ட ரூ.1,35,00,000/-க்கு (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து ஐந்து இலட்சம் மட்டும்) உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.121/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1166 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.17</u>

குழித்துறை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-2024-ன்கீழ் ரூ.14.60 கோடி மதிப்பீட்டில் நவீன சந்தை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தற்பொழுது கட்டிடப்பணி நடைபெற்று வரும் பகுதியில் உள்ள உயர்கோபுர மின்விளக்கு கட்டுமான பணிக்கு இடையூறாக உள்ளதால் உயர்கோபுர மின் விளக்கினை சந்தை வளாகத்தில் மாற்றி அமைத்திட ரூ.2,00,000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**122/2025/இ1
மன்றத்தீர்மான எண்.1167 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.18</u>

குழித்துறை நகராட்சியில் நகர்மன்ற கூடம் இரண்டாவது மாடியில் செயல்பட்டு வருகிறது. நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் Lift Arrangement செய்திட தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் Lift வசதி செய்திட ரூ.37,00,000/-க்கு (ரூபாய் முப்பத்து ஏழு இலட்சம் மட்டும்) உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**120/2025/இ1
மன்றத்தீர்மான எண்.1168 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.19</u>

குழித்துறை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-2024-ன்கீழ் ரூ.151.60 இலட்சம் மதிப்பீட்டில் நவீன மின் மயான மேடை அமைக்கப்பட்டு பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. தற்பொழுது மின் மயானத்திற்கு செல்லும் பாதையில் Paver Block கற்கள் பதிக்கவும் பெயர் பலகை மற்றும் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஜெனரேட்டரை மாற்றி அமைத்திடவும் ரூ.4,40,000/-ல் உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**3020/2024/இ1

மன்றத்தீர்மான எண்.1169 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.20</u>

குழித்துறை நகராட்சியில் 1 முதல் 21 வரையுள்ள வார்டுகளில் தினந்தோறும் சீரான குடிநீர் வினியோகம் செய்திட குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் IUDM 2018-2019-ன்கீழ் ரூ.30.94 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணி முடிக்கப்பட்டு 11 மேல்நிலை தொட்டிகள் மூலம் குடிநீர் வினியோகம் ஒப்பந்த அடிப்படையில் 8 பணியாளர்கள் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய ஒருவருட காலம் ஜனவரி 2025-ல் முடிவடைகிறது. எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள ஜனவரி 2025 முதல் ரூ.19.80 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.123/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1170 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.21</u>

குழித்துறை நகராட்சி மீது திரு.T. தேவராஜ், த/பெ. தங்கப்பன் என்பவரால் மதுரை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P(MD)No.18230/2024-க்கு பத்திவாரிகுறிப்பு தயாரிக்கப்பட்ட வகைக்கு தொகை ரூ.5,000/- நகராட்சி வழக்கறிஞர் திரு.D. ஷாஜிகுமார் அவர்களுக்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.4243/2022/ந.அ.ஆ.

மன்றத்தீர்மான எண்.1171 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.22</u>

குழித்துறை நகராட்சி மீது திரு. பிரான்சிஸ் என்பவரால் மதுரை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P(MD)No.22652 of 2024-ற்கான பத்திவாரிகுறிப்பு தயாரிக்கப்பட்ட வகைக்கு தொகை ரூ.5,000/- நகராட்சி வழக்கறிஞர் திரு.D. ஷாஜிகுமார் அவர்களுக்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.2102/2024/ந.அ.ஆ.

மன்றத்தீர்மான எண்.1172 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்23</u>

குழித்துறை நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 21 வரையிலான வார்டுகளில் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள மின்கம்பங்களை மாற்றியமைத்திட குழித்துறை மற்றும் மார்த்தாண்டம் மின் வாரியங்களிடமிருந்து கீழ்கண்டுள்ளவாறு தொகை செலுத்திட கேட்பு பெறப்பட்டுள்ளது.

I. குழித்துறை மின்வாரியம் - ரூ.7,20,677
II. மார்த்தாண்டம் மின்வாரியம் - ரூ.2,55,863

--------------------

மொத்தம் ரூ.9,76,540

--------------------

மேற்கண்ட தொகையின் மின்வாரியங்களுக்கு செலுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**336/2020/**இ**1

மன்றத்தீர்மான எண்.1173 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.24</u>

குழித்துறை நகராட்சி மீது திரு.M. கிறிஸ்துராஜ் என்பவரால் மதுரை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P(MD)No.19152/2024-க்கு வாதாடிய வகைக்கு தொகை ரூ.10,000/- நகராட்சி வழக்கறிஞர் திரு. ஆதிமூலபாண்டியன் அவர்களுக்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.**3066/2022/**அ**2.

மன்றத்தீர்மான எண்.1174 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.25</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் மார்த்தாண்டம் கீழ்பம்மத்தில் உள்ள MCC-யில் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்தும் வேலை நடைபெற்று வருகிறது. MCC-யில் குப்பைகளின் அளவுகளை சரிபார்ப்பதற்கு (சுமார் 1000Kg-க்கான) எடை இயந்திரம் இல்லாமல் உள்ளது.

எனவே மேற்படி MCC மற்றும் MRF-ல் (சுமார் 1000Kg-க்கான) எடை இயந்திரம் 2 எண்ணம் புதிதாக வாங்கிட ஏற்படும் உத்தேச செலவினம்

ரூ.70,000/- செலவின தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் அனுமதிக்கும்.
ந.க.எண்.2832/2024/எச்1

மன்றத்தீர்மான எண்.1175 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.26

மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் இயங்கி வரும் குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்திற்கு புதிதாக ரசீது இயந்திரம் ரூ.9,790/-க்கு வருவாய் ஆய்வாளர் திரு.கு. செந்தில்குமார் அவர்களால் வாங்கப்பட்டது. எனவே மேற்படி தொகையினை அன்னாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1221/2015/அ1.

மன்றத்தீர்மான எண்.1176 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.